ஒருவரும், ஆக மொத்தம் 18 பேர், நூலஅள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், அவர் துணைக் கேள்வியாக, பாளையம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் இல்லை என்ற குறையையும் தெரிவித்திருக்கிறார்கள். அவர் எழுப்பியிருக்கக்கூடிய அந்தக் கூடுதல் வினாவிற்கு துறையின்மூலம் ஆய்வு செய்து, அவர் சொல்வதுபோல், அந்தப் பகுதிக்கு மருத்துவர்கள் வரவில்லை என்றால், உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்ற செய்தியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தே.மு.தி.க. உறுப்பினர்களுக்கு மானியக் கோரிக்கை விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசும் வாய்ப்பு வழங்கியதற்கு நன்றி

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் தாராள மனதோடு மீண்டும் எங்களுக்கு உரிய இடத்தை தங்களுடைய தீர்ப்பின்மூலம் நேற்று வழங்கியிருக்கிறீர்கள். அதற்காக எங்களுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் என்பார்கள். அதைப்போல மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தாங்கள் அந்த முடிவை எடுத்ததற்குத் தூண்டுகோலாக இருந்திருக்கிறார்கள் என்பதைக் கருதுகிறபோது, உண்மையிலேயே நாங்கள் பெருமைப்படுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சான்றாண்மையோடு அணுகியிருக்கின்றார்கள். ஒரு கன்னத்தில் அறைந்தால், மறு கன்னத்தைத் காட்ட வேண்டும் என்றார் ஏசுபிரான். ஆனால், அதற்கும் மேலாக திருவள்ளுவர் சொல்கிறார்,

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?"

கெடுதல் செய்பவர்களுக்கும் நல்லது செய்வதுதான் அப்பா, சால்பு என்று திருவள்ளுவர் சொல்கிறார். அந்த சான்றாண்மையின் அடிப்படையில், இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அணுகியிருக்கின்றார்கள்.

*முற்பகல் 11-40*

அவர்களுடைய பரந்த உள்ளத்திற்கும், பெருந்தன்மைக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவையை முன்னின்று நடத்தக்கூடிய பெரும் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், தங்களுடைய இந்த முடிவுக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள் என்று கருதுகின்றபோது, அவர்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுக்கு வாய்ப்பு இல்லாதபொழுது, அது தங்களுக்குத்தானே கிடைக்கும் என்ற சுயநல நோக்கம் சிறிதும் இல்லாமல், தே.மு.தி.க.வுக்கே அந்த வாய்ப்பை மீண்டும் தாருங்கள் என்ற தியாக உள்ளத்தோடு, தொடர்ந்து நேசக்கரம் நீட்டிய எதிர்க்கட்சி வரிசையில் உள்ள எனது அருமை அரசியல் கட்சித் தலைவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் பேரவையை நடத்திச் செல்ல நாங்கள் முழு ஒத்துழைப்புத் தருவோம் என்று உறுதி கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு திருக்குறளை மேற்கோள் காட்டி இங்கே நீங்கள் எடுத்த நடவடிக்கையைப் பாராட்டினார்கள். நானும் அவர்களுக்கு ஒன்றை அன்போடு சொல்லிக்கொள்கிறேன். அதே திருவள்ளுவர்தான் சொல்லியிருக்கிறார்கள்.

> "இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்து விடல்."

என்று திருவள்ளுவர் சொன்னதற்கிணங்க, (மேசையைத் தட்டும் ஒலி) கெடுதல் செய்வதர்களுக்கும்கூட நல்லது செய்கின்ற தாராள உள்ளம் கொண்டவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதையும் அவர் சேர்த்துச் சொல்லியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். இருந்தாலும் அவருடைய பெருந்தன்மைக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எங்களுடைய நன்றியை இன்றும் நான் பதிவு செய்கின்றேன். இதே மரபுப்படி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை தொடர் முழுவதும் வெளியேற்றியிருப்பதைக் கைவிட வேண்டுகிறேன். தி.மு.க.வின் நடவடிக்கைகள் எதையும் ஆதரித்தோ, எதையும் நான் சப்பைக்கட்டியோ சொல்லவில்லை. என்ன விவாதம் நடந்தாலும், என்ன மோதல் நடந்தாலும், ஒரு தொடர் முழுவதும் அவர்களைத் தள்ளிவைக்க வேண்டாம் என்கின்ற என்னுடைய கருத்தை நான் வலியுறுத்தி, அதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பெருந்தன்மையோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெற்கெல்லாம் விதியைத் தளர்த்தவேண்டும். நீங்கள் கேட்பதற்கு, விதியைத் தளர்த்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள், நாங்களெல்லாம் எதிர் வரிசையிலே இருந்து, எதிர்க்கட்சித் தலைவர்கள் முதலில் பேச வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில், அவர்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பினைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டபொழுது, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், பெருந்தன்மையோடு அவைக்கு வரவேண்டும், சபையிலே கலந்துகொள்ள வேண்டும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கொடுக்கக்கூடிய நேரத்திலே தங்களுடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலே கலந்துகொள்ளலாம் என்ற அடிப்படையில் இங்கே தெரிவித்து, நீங்களும் தாங்கள் அளித்திருக்கக்கூடிய தீர்ப்பினை மாற்றி, அவையிலே கலந்துகொள்வதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இந்த நேரத்திலே நன்றியை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம், அந்தக் கட்சியினுடைய நடவடிக்கைகளைப் பற்றி நான் பேசவில்லை. செயல்பாட்டைப் பற்றிச் சொல்லவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கெல்லாம் விதியைத் தளர்த்த வேண்டிவரும். அந்தக் கோரிக்கைகளையெல்லாம் பரிசீலிப்பது என்பது நிரம்ப கஷ்டம். அதற்கு விதியைத் தளர்த்த வேண்டும். நீங்கள் நன்றி சொன்னதோடு, நிறுத்திக்கொள்ளுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** விதியை மாற்றுவது என்பதும், உத்தரவுபோடுவது என்பதும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய கையிலே இருக்கக்கூடிய ஒன்று. எனவே, அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கருணை மனு போடுகின்ற காலம். ஆகையினாலே, தாங்கள் விதிகளை மட்டுமே பார்க்காமல், கருணையின் அடிப்படையிலேயும் இதைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அனைவரும் வைத்த கோரிக்கையை ஏற்று, தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீண்டும் சபையிலே பணியாற்றக்கூடிய வகையிலே, உத்தரவிட்ட தங்களுக்கும், பரிசீலித்த மரியாதைக்குரிய தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் கூறியதுபோல, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் இங்கே கலந்துகொள்ளும் சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் நல்லதொரு குறளை மேற்கோள் காட்டிப் பேசினார்கள். மிகுந்த பரந்த மனப்பான்மையுடன் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள், தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்களுக்கு மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது, மரபுப்படி, முதலாவதாக அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைக்கலாம் என்று அவர்கள் பரிந்துரை செய்ய, எங்களுடைய கோரிக்கைகளை ஏற்று நீங்களும் சிறப்பானதொரு தீர்ப்பை நேற்று அளித்தீர்கள். அதற்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, இதே அடிப்படையிலே, சி.பி.எம்., சி.பி.ஐ. மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும்—அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றி நான் இங்கே பரிந்து பேசவரவில்லை—ஆனால், ஒரு எதிர்க்கட்சி என்ற அடிப்படையிலே, ஜனநாயகத்திற்கு வலு சேர்க்கக்கூடிய வகையிலே, இந்த அரசு ஜனநாயக நெறிமுறைகளை மிகச் சிறப்பாகக் கடைப்பிடித்து, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகச் செயல்படுகின்றது என்பதை அனைவரும் உணரக்கூடிய வகையிலே, அவர்களுக்கு மீண்டும் அவையிலே பங்கு கொள்ளக்கூடிய வாய்ப்பை நீங்கள் தருவதற்கு முன்வர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள் டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக்கூடிய நாங்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, தே.மு.தி.க-விற்கு எதிர்க்கட்சி என்ற அந்தஸ்திலே, முதலாவதாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, அதேபோல இப்போது அடுத்த ஒரு மாத காலத்திற்கு அவை நடவடிக்கைகளிலிருந்து முற்றாக விலக்கி வைக்கப்பட்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அந்த விதியை, அதாவது இப்போது கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தத் தீர்ப்பை மாற்றி, அவர்கள் அவையிலே கலந்துகொள்ளக்கூடிய வகையிலே, தாங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.